# தமிழர் சமயம்

விலை ரூ.10/- ஆண்டுச் சந்தா ரூ.100/–

மலர் 3 ஜூன் – ஜூலை 2012 இதழ் 7
Volume 3 June - July 2012 Issue 7

## சாதி ஏற்றத்தாழ்வு
## மனப்பான்மை ஒழிப்பு மாநாடு
## மாநாட்டில் நடந்தது என்ன?

தொகுப்பு

# சாதி ஏற்றத்தாழ்வின்
# தோற்றம் - வளர்ச்சி - இன்றைய நிலைகள் - அகற்றும் வழிகள்

சாதி ஏற்றத்தாழ்வு மனப்பான்மை ஒழிப்பு மாநாடு
சூழ்ச்சிகள் மத்தியிலும்
வெற்றி பெற்றதன்
**பின்னணி என்ன?**

# சாதி ஏற்றத்தாழ்வு மனப்பான்மை ஒழிப்பு மாநாடு

# மாநாட்டில் நடந்தது என்ன?

தொகுப்பு
பொறியாளர்
கி. முத்துராம—ங்கம்



19 மே 2012 அன்று காலை 10 மணி முதல் இரவு 7 மணி வரை பெரியார் திட—ல், அனைத்துத் தன்மானத் தமிழர்களின் கூட்டமைப்பால் நடத்தப்பட்ட 'சாதி ஏற்றத்தாழ்வு மனப்பான்மை ஒழிப்பு மாநாட்டில் நடத்தப்பட்ட அரங்குகளில் அறிஞர் பெரு மக்கள் ஆற்றிய உரைகள் என்ன?



சீர்காழி சிவ சந்திரசேகரன்

அரங்குகளில் என்னென்ன கருத்துகள் பகிர்ந்து கொள்ளப்பட்டன?

மாநாட்டு இறுதியில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் என்ன?

என்பவற்றை இனி காண்போம்.

மாநாட்டிற்கு கருத்துகளைப் பதிவு செய்ய வந்திருந்த அறிஞர் பெருமக்களையும் மாநாட்டில் பங்கு பெற வந்திருந்தோரையும் திரு. சீர்காழி சிவ. சந்திரசேகரன் வரவேற்றுப் பேசினார்.

**அரங்கம் – 1**

**தலைமை :**

**மறைந்து கிடக்கும் தமிழ் மொழி தமிழினத்தின் மாண்புகளை வெளிப்படுத்தும் அரிய படைப்புகளான 1. தமிழ்க் கல்வி 2. சிற்ப அம்பலம் ஆகியவற்றைப் படைத்துள்ள உயர் பெரும் ஞானி இறுதியில் இன்பத்தான் என்கிற சதானந்தம் அவர்களையும் அவர்களுடைய இரு நூல்களையும் அறிமுகம் செய்த பேராசிரியர் தெய்வநாயகம் அவர்கள் ஞானி சதானந்தம் அவர்களையே முதல் அரங்கிற்குத் தலைமையேற்று தொடங்கி வைக்கக் கேட்டுக் கொண்டார்**



இறுதியில்
இன்பத்தான்

இன்றைய தமிழ்ச் சூழ—ல் தமிழர்களிடம் விழிப்புணர்வு கொண்டு வருவது என்பது அவ்வளவு எளிதான செயல் அன்று; கடினமான செயலாகும்.

அச்செயலை, பேராசிரியர் தெய்வநாயகமும் முனைவர் தெ. தேவகலாவும் செய்து வருகின்றார்கள்.

மனிதர்களுக்கும் நாய்களுக்கும் வேறுபாடு இருக்கிறது. மனிதர்களும் நாய்கள் ஆவதுண்டு. எப்போது என்று நீங்கள் எண்ணலாம். இறைவனின் கட்டளைகளை நாம் மீறி செயல்படும்போது நாம் தெருநாய்கள் ஆகிவிடுகிறோம். சாதி, மதம் என்பவையெல்லாம் இறைவன் படைப்புகள் அல்ல. அவற்றை நாம் உருவாக்கி இருக்கின்றோம்.

ஒரு துறவி தன்னை வெறுமனே துறவி என்றுதான் சொல்ல வேண்டும். ஏனென்றால், எல்லாவற்றையும் துறந்தவரே துறவி எனப்படுவார்; அப்படியிருக்க, நான் 'சைவத் துறவி' என்றோ, 'கிறித்தவத் துறவி' என்றோ சொல்வது அவருக்கு இருக்கும் மதப்பற்றைத் தான் வெளிக்காட்டுகிறது. மதத்தில் பற்று கொண்ட பின் அவர் எல்லாவற்றையும் துறந்தவர் என்று சொல்வது பொருத்தமாகாது அல்லவா?

சாதியையும் குலத்தையும் பிறப்பையும் பிடித்து அலைபவர்களை நாய்கள் என்று ஏசுகிறார் மாணிக்கவாசகர். அவருடைய திருவாசகம்,

**"சாதிகுலம் பிறப்பு என்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்**

**ஆதமி– நாய்கள்"**

என்று மனிதர்களைத் திட்டுகிறது.

வாழ்விற்கும் நல்வாழ்விற்கும் வேறுபாடு இருக்கிறது. 'பசி பிணி பகை இல்லா வாழ்வே நல்வாழ்வாகும். அந்நல்வாழ்வு தமிழர்களுக்கு வாய்க்க வேண்டும். பூக்கர் வாசிங்டன் என்று ஓர் அமெரிக்கர் இருந்தார். அவர் ஒடுக்கப்பட்ட கறுப்பர்களுக்கு அயராது பாடுபட்டார். அவர் ஒடுக்கப்பட்டோருக்கு உழைத்தது போல் இங்கு பேராசிரியர் தெய்வநாயகம் பாடுபட்டு வருகிறார்.

**தொடக்கவுரை: முனைவர் மு. தெய்வநாயகம்**

தமிழ் இனம் தன்னையே கொடையாக்கிய தெய்வீக இனம். இலங்கையில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்ட போது இங்கு முத்துக்குமார் முத—ய தமிழர்கள் தீக்குளித்து தங்களையே கொடையாக



முனைவர் மு. தெய்வநாயகம்

ஈந்தார்கள். தன் சொந்த இனம் அழிக்கப்பட்டபோது கூடத் தன்னைத் தானே கொடையாக்கி எதிர்ப்பைப் பதிவு செய்தார்களே தவிர, பிறரைக் கொல்ல எண்ணவில்லை; அப்படிப்பட்ட உயர்ந்த தெய்வீகச் சிந்தனைகளை உடைய இனம் தமிழ் இனம். நன்மைக்கு நன்மை செய்வது மனித இயல்பு! தீமைக்கும் நன்மை செய்வது தெய்வ இயல்பு! அத்தகைய தெய்வ இயல்பைக் கொண்டு தமிழினம் வாழ்ந்து வருகிறது.

நம்முடைய தமிழினம் தான் உலகிற்கே ஆறாவது அறிவைப் புரிய வைக்கிறது.

"ஆறறிவதுவே அவற்றொடு மனனே" என்று இலக்கணத்தில் ஆறாவது அறிவைப் பேசுகிறது தமிழ். அந்த ஆறாவது அறிவு தான் இறைவனை உணர்ந்து அனுபவிக்க உதவுகிறது.

இங்கு சேரநாட்டில் எழுந்த அத்வைதம், தொண்டை நாட்டில் எழுந்த விசிட்டாத்துவைதம், அருகில் உள்ள கருநாடகத்தில் எழுந்த துவைதம் ஆகிய கொள்கைகளுக்கு உயிருக்கும் ஆன்மாவிற்கும் வேறுபாடு தெரியாது. இவை மூன்றும் ஆன்மாவை அறியாத கொள்கைகளாகும். இவை கடவுளை அறியாத் தத்துவங்களாகும்.

பிராமணர்கள் 'பிரமம்' என்று உயிரைக் குறிக்கிறார்களே தவிர பேரான்மாவை அன்று.

சிவஞானபோதம்தான் உயிரையும் ஆன்மாவையும் பிரித்துப் பேசுகின்றது. ஆனால், இன்று சிவஞானபோதம் ஆன்மாவிற்கும் உயிருக்கும் வேறுபாடு தெரியாதவர்கள் கைகளில் சிக்கியிருக்கிறது. அதனால் தான் தமிழர்கள் இன்னும் விழிப்படையாமல் இருக்கிறார்கள்.

திருநீற்றைப் பற்றியோ, திருமண்ணைப் பற்றியோ இருக்கு, யசுர், சாம, அதர்வண வேதங்கள் எவற்றிலும் சிறு குறிப்புக் கூடக் கிடையாது. அப்படியானால் 'வேதத்தில் இருப்பது நீறு' என்பதில் வேதம் என்று எது குறிப்பிடப்படுகிறது என்று சிந்திக்க வேண்டும்.

இங்கு பிராமணர்கள் எல்லாவற்றிலும் இடைச்செருகல்களைச் செய்திருக்கிறார்கள். ரிக் வேதத்தின் புருச சூக்தத்தில் இடைச்செருகல் இருக்கிறது; அருத்தசாத்திரத்தில் இடைச்செருகல் இருக்கிறது. பகவத் கீதையில் இடைச்செருகல் இருக்கிறது. கிருட்டிணன் என்றாலே கருப்பன் என்பது தான் பொருள் ஆகும். கிருட்டிணன் யாதவர் குலத்தைச் சேர்ந்தவர்; சூத்திரர். இப்படியிருக்க, ஒரு கருப்பனே 'கருப்பர்கள் இழிவானவர்கள்; அதை என்னால் கூட மாற்ற முடியாது' என்று சொல்வானா? இப்படிப் பேசப்படா மொழியாகிய சமற்கிருதத்தில் என்னென்ன இடைச்செருகல்களைச் செய்திருக்கிறார்கள் என்று நம்மால் எளிதாகக் கண்டறிய முடியும்.

**அரங்கம் – 2**

**தலைமையுரை:**

**பொறுப்பு அலுவலர்–செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் பேராசிரியர் முனைவர் க. இராமசாமி**

**பேராசிரியர் தெய்வநாயகம் எழுதியிருக்கும் 'உலக சமயங்களை ஒன்றிணைக்கும் தமிழர் சமயமும் தமிழர் ஆன்மவியலும்' என்னும் நூல் என்னை மிகவும் கவர்ந்த நூலாகும். எப்படித் திருக்குறள் ஒவ்வொரு தமிழன் கையிலும் இருக்க வேண்டும் என்று சொல்கிறோமோ அதே போல் இந்நூலையும் தமிழர்கள் ஒவ்வொருவரும் படிக்க வேண்டும். தமிழினம் கண்டிப்பாக அடிமைத்தளையில் இருந்து விடுதலையடையும் என்னும் அவருடைய நம்பிக்கையுடன் நான் பொருந்திப் போகிறேன். என்னுடைய உணர்வுகள் என்றும் அவருடன் உண்டு. 'நடக்கும்' என்னும் அவருடைய நம்பிக்கை', உறுதியாகப் ப–க்கும் என்னும் நம்பிக்கை, இந்த மாநாட்டிற்கு வந்த பிறகு எனக்கும் தெம்பூட்டியிருக்கிறது.**

அறிவின் அடிப்படையில் உயிரினங்களைப் பகுப்பது உலக மொழிகளில் தமிழுக்கே உரிய சிறப்பாகும். "ஆறறிவதுவே அவற்றொடு மனனே" என்று அறிவின் அடிப்படையில் இங்கு உயிர்ப் பகுப்பு இருக்கிறது. சொற்களைக் கூட மாந்தர் பெயர்ச்சொற்கள், மாந்தர் அல்லாதவைக்குரிய பெயர்ச்சொற்கள் என்று தமிழ் வரையறுத்துச் சொல்–யிருக்கிறது.

சிவஞானபோதம் என்பது அனுமானம் அன்று! அது அறிவியல் தத்துவம் ஆகும். நம்முடைய முன்னோர்கள் சாதி, மதம் கடந்து மனித இனம் ஒன்றுபட வேண்டும் என்றுதான் விரும்பினார்கள். 'சாதி, மத விகற்பங்கள் ஒழிக்கப்பட வேண்டும்' என்று தான் இராம–ங்க வள்ளலார் விரும்பினார்.

இங்குள்ள சமூக அமைப்பு முறையில் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், முற்படுத்தப்பட்டோர் என்னும் பிரிவுகளுக்கு,

'தாழ்த்தப்பட்டோர் – எதிரிகளை எதிர்த்தோர்

பிற்படுத்தப்பட்டோர் – இராமன் ஆண்டால் என்ன இராவணன் ஆண்டால் என்ன என்று கவலைப்படாமல் இருந்தோர்

முற்படுத்தப்பட்டோர் – எதிரிகளுக்குக் காட்டிக்கொடுத்த மக்கள்'

என்று முனைவர் தெய்வநாயகம் சொல்லும் வரையறை இதுவரை நான் எங்கும் அறியாத ஒன்றாகும். ஆனால் முழுமையாகப் பொருந்துகின்ற ஒன்றாக அவர் இவ்வரையறையைக் கொடுத்திருக்கிறார்.

இறைவன் இருக்கின்றானா? இல்லையா? என்னும் கேள்வி எழுவதுண்டு. மனிதன் நினைத்தால் இறைவன் இருக்கிறான்; மனிதன் மறந்தால் இறைவன் இல்லை' என்று தான் சொல்ல முடியும். டார்வினின் பரிணாமக் கொள்கை தவறு என்று சொல்வதில் எனக்கு முழு உடன்பாடு உண்டு. ஏனென்றால், மனித மொழியை எடுத்துக்கொள்ளுங்கள். நம்முடனே பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக உடன் இருக்கும் எவ்விலங்கும் மொழியைக் கற்பதில்லை.

இம்மாநாடு இலட்சக்கணக்கானோர் கூட வேண்டிய மாநாடு. ஆனால், நாடு இருக்கின்ற சூழ–ல் நூற்றுக்கணக்கில் தான் கூடியிருக்கிறோம். 1960களில் பாடுவார்கள்.

"வெள்ளைக்காரன் போய்விட்டான் திராவிடத் தோழா!

கொள்ளைக்காரன் வந்து விட்டான் திராவிடத்



முனைவர் க. இராமசாமி

தோழா! என்று.

அதே சூழ–ல் தான் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்நிலைகள் எல்லாம் மாற, பெரிய புரட்சி வர வேண்டும்; வரும்! அப்படி வராவிட்டால் நாம் உருவாக்குவோம். தலைமையின்றித் தடுமாறும் தமிழினத்திற்கு நல்ல தலைவராகத் தெய்வநாயகம் கிடைத்திருக்கிறார். அவர் தலைமையில் நாம் அணி திரண்டு வெற்றியை ஈட்டுவோம்.

**சிறப்புரை:**

## இந்து சமய அறநிலையத்துறை முன்னாள் அமைச்சர் வி.வி. சுவாமிநாதன்:



முன்னாள் அமைச்சர் வி.வி. சுவாமிநாதன்

நாம் குழுமியிருக்கின்ற பெரியார் திடல் பகுத்தறிவாளர்களின் மெக்கா, யெருசலேம். தந்தை பெரியார் ஒருவர் இல்லை என்றால் இன்று நான் இல்லை; நீங்கள் இல்லை.

நான் சில தீர்மானங்களை எடுத்து வந்திருக்கிறேன். விடுதலை அடைந்து அறுபது ஆண்டுகளுக்கு மேலான பின்னும் வெள்ளைக்காரன் நமக்குக் கொடுத்த 'இந்து' என்பதைத் தான் சொல்-க் கொண்டிருக்கிறோம். எனவே, 'இந்து சமய அறநிலையத்துறை' என்பதைத் 'தமிழர் சமய அறநிலையத் துறை' என்று முத-ல் மாற்ற வேண்டும்.

சீக்கியர்களின் பொற்கோவிலுக்கு முன் பொன் வேயப்பட்ட கோவில் நம்முடைய சிதம்பரம் கோவில். இவ்வளவு பெரிய சிறப்புக்குரிய கோவில் அறநிலையத்துறையின் கையில் இல்லாமல் அங்குள்ள தீட்சிதர்களின் கைகளில் இருந்தது. நாங்கள் அதை எதிர்த்துப் போராடினோம். தி.க. தலைவர் வீரமணியும் சிதம்பரத்தில் கூட்டம் போட்டுப் பேசினார். பிராமணர்கள் 'வீரமணி எப்படிச் சிதம்பரம் கோவிலைப் பற்றிப் பேசலாம்' என்றெல்லாம் கேட்டார்கள். அவ்வெதிர்ப்புகளை எல்லாம் எதிர்த்துத் தீவிரமாகப் போராடினோம். போராட்டம் என்றால் சாதாரணமாக இல்லை – காவல்துறை வந்து தீட்சிதர்களைக் கட்டுப்படுத்திய போது தீட்சிதர்கள் காவல்துறையினரின் சட்டைகளைக் கிழித்துச் சண்டை போட்டார்கள். அந்த அளவு போராடினார்கள்.

நாங்கள் நீதிக்காகப் போராடினோம். இறுதியில் நீதி வென்றது. அப்படித்தான் சிதம்பரம் கோவிலை அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தோம்.

தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டும் என்று பேசுகிறோம். தீண்டாமை என்றால் மெய் தீண்டாமை மட்டுமல்ல! மொழித் தீண்டாமையும் ஒழிக்கப்பட வேண்டும். தமிழ்தான் தமிழ்நாட்டின் ஆட்சி மொழி! ஆனால், தமிழகக் கோவில்களில் இன்னும் தமிழ் தீண்டப்படாத மொழி தான்! இந்நிலை மாற்றப்பட வேண்டும். இந்நிலைக்கு பிராமணர்கள் மட்டும் தான் காரணம் என்று சொல்- ஒதுங்கிவிடக் கூடாது. மானம் கெட்ட தமிழனும் காரணம் என்பதை முத-ல் நாம் உணர வேண்டும். அரசியல் சட்டம் 13 – 17இன் கீழ் தமிழக அரசு அவசரச் சட்டம் ஒன்றைப் பிறப்பித்துத் தமிழை ஆலய மொழியாக்க வேண்டும். அதுவரை அரசியல் விடுதலை தான் கிடைத்திருக்கிறது. ஆன்மீக விடுதலை இன்னும் கிடைக்கவில்லை என்றுதான் சொல்ல முடியும்.

தமிழர்களின் பண்பாட்டுக் கலைச் சின்னங்களுள் குறிப்பிடத்தகுந்த ஒன்று தஞ்சாவூர் பெரிய கோவில். தமிழ் மன்னன் இராசராச சோழன் நிறுவிய அக்கோவில், இன்றுவரை தமிழர் கையில் இல்லை; நம்மை எதிர்த்து வந்து ஆட்சியைப் பிடித்து ஆண்ட மராட்டிய மன்னர் தலைமுறைதான் பெரிய கோவிலை நிருவகித்து வருகிறது. தமிழர்களின் கலைச்சின்னத்திற்கு மராட்டிய பான்சுலே தான் இன்று வரை அறங்காவலர். இது வேடிக்கையாகவும் வேதனையாகவும் இல்லையா? ஆனால் அது தான் தமிழர்களின் நிலை!

இன்று "தமிழ்நாட்டைத் தமிழரே ஆள வேண்டும்" என்னும் கருத்தியலை முன்னெடுத்திருக்கிறோம். தமிழனே ஆள வேண்டும் என்று சொன்னால் மட்டும் போதாது; தமிழன் யார் என்பதையும் நாம் தெளிவாக வரையறுக்க வேண்டும்.

விடுதலை பெற்ற பிறகு திருப்பதியை இழந்திருக்கிறோம்; தேவிகுளம், பீர்மேட்டை இழந்திருக்கிறோம்; கச்சத்தீவை இழந்திருக்கிறோம்; கண்எதிரே இலட்சக்கணக்கான தமிழர்களை இழந்திருக்கிறோம். இனி இழப்பதற்கு ஏதுமில்லை! இனியாவது தமிழினம் தன் நிலை உணர்ந்து விடுதலையடைய வேண்டும்.

## மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் முனைவர் க. ப. அறவாணன்

தெய்வநாயகம் என்று சொன்னாலே இன்று தமிழ்நாட்டில் அஞ்சுகின்ற ஒரு கூட்டம் இருக்கிறது. அந்த அளவு தெய்வநாயகம் சாதித்திருக்கிறார். அதுவே வெற்றி தான்!

நான் என்னுடைய குழந்தைகளைச் சாதி சொல்லாமலே வளர்த்தேன். கல்லூரி சென்ற பிறகு கல்வி உதவித் தொகை வாங்கும் ஒரு சூழ-ல், அதுவும் நான் சொல்லாமல், என் மகன் சொந்த ஊருக்குச் சென்று விசாரித்துத் தான் சாதியைத் தெரிந்துகொண்டான்.

நாம் தமிழைக் காப்பாற்றுங்கள், தமிழைக் காப்பாற்றுங்கள் என்று சொல்வது தமிழ் அழிந்து விடும் என்பதற்காக அன்று! மாறாகத் தமிழைக் காப்பாற்றினால் தான் தமிழன் மீட்கப்பட முடியும் என்பதற்காகத் தான்! தமிழைக் காப்பாற்றுங்கள் என்று சொல்வது அது தமிழனைக் காப்பாற்றும் என்பதற்காகத் தான்! மற்றபடி தமிழ் தன்னைத் தானே தகவமைக்கும் தன்மை உடையது.



முனைவர் க.ப. அறவாணன்

இங்கு நம்முடைய கடலுக்கு 'அரபிக்கடல்' என்று பெயர் வைத்திருக்கிறார்கள். இங்கு எங்கே அரேபியர்கள் இருக்கிறார்கள்? பின்னே ஏன் 'அரபிக்கடல்' என்று இருக்கிறது. இன்னொரு பக்கம் இருக்கிற கடலை 'வங்காள விரிகுடா' என்று சொல்கிறார்கள். வங்காளம் எங்கே இருக்கிறது? இங்கிருக்கிற கடலுக்கு 'வங்காளப் பெயர்' எதற்கு?

தமிழ் ஈழத்திற்கும் தமிழகத்திற்கும் இடையே கடல் இருக்கிறது; கடலுக்குக் கீழும் தமிழினம்; மேலும் தமிழினம்; அப்படியானால் கட-ன் பெயர் தமிழ் மகா சமுத்திரம் என்றல்லவா இருக்க வேண்டும்? ஆனால் இருக்கும் பெயரோ 'இந்து மகா சமுத்திரம்! இது தான் நம்முடைய நிலை! உலகச் செம்மொழிகளில் பழமையான இலக்கியங்கள் பல உள்ளன. கிரேக்க இலக்கியங்கள் கிரேக்கன் என்பதை நினைவுபடுத்தி நிற்கின்றன. சீன இலக்கியங்கள் சீனன் என்பதை நிலைநிறுத்தி அமைகின்றன. இங்குள்ள சங்க இலக்கியங்களை எடுத்துப் பாருங்கள் – அவை தமிழனை ஓர் இடத்தில் கூட முன் நிறுத்தாதவை! அவை உலக மாந்தர் வாழ்விற்கு எழுதப்பட்டவை!



முனைவர் தெ.தேவகலா

நம்முடைய சங்க இலக்கியங்களில் 75 விழுக்காடு அக நூல்கள்! அதனுடைய தொடர்ச்சிதான் இன்று வரை முதலமைச்சர்களைத் திரைத்துறையிலேயே தேடிக் கொண்டிருக்கிறோம். தமிழ்நாட்டைத் தாண்டி வேறெங்காவது திரைத்துறையில் அடுத்த முதலமைச்சர் காத்திருக்கிறாரா? இந்நிலை மாற்றப்பட வேண்டும்.

**அரங்கம் 3**

**சாதி ஏற்றத்தாழ்வின் தோற்றம் –**

**வளர்ச்சி – இன்றைய நிலைகள் – ஒழிக்கும் வழிகள்**

முனைவர் தெ. தேவகலா இவ்வரங்கில் சாதி ஏற்றத்தாழ்வின் தோற்றம், வளர்ச்சி, இன்றைய



கரூர் இராஜேந்திரன்

நிலைகள், அழிக்கும் வழிகள் குறித்து 84 கருத்துக் குறிப்புகளை (Slides) வரலாற்று அடிப்படையில் ஒளித்திரை மூலம் விளக்கிக் காட்டினார் (பக். 13–18)இல் காண்க.

**அரங்கம் 4**

**சிறப்புரை: வழக்கறிஞர் கரூர் இராஜேந்திரன்**

பேராசிரியர் தெய்வநாயகம் அவர்களுடன் எனக்கு ஏறத்தாழ இருபதாண்டுப் பழக்கம் இருக்கிறது. ஆனால், அப்பழக்கத்தைத் தாண்டிச் சாதி ஏற்றத்தாழ்வு ஒழிப்பு அரங்கத்தில் பங்கேற்கும் முழுத் தகுதியும் எனக்கு உண்டு என்றே நினைக்கிறேன். ஏனென்றால், நான் சாதி மறுப்புத் திருமணம் புரிந்தவன்; என்னுடைய மனைவியின் தங்கைக்கும் வேற்றுச் சாதியைச் சேர்ந்த ஒருவரைத் திருமணம் செய்து வைத்தேன். அது மட்டுமல்லாமல் இந்தச் சாதிகளைச் சாராத ஒருவருக்கு என்னுடைய தங்கையைத் திருமணம் செய்து வைத்தேன். ஆகவே, இம்மாநாட்டில் பங்கேற்க எனக்கு முழுத் தகுதியும் உண்டு என்றே உணர்கிறேன். இவை போதாதென்று சாதி மறுப்புக் காதல் திருமணங்கள், மதம் மறுப்பு காதல் திருமணங்கள் என எண்ணற்ற திருமணங்களை நடத்தி வைத்திருக்கிறேன்.

நானே சாதி மறுப்புத் திருமணம் செய்தவன் என்பதால் வரும் நன்மைகளை நன்கு அறிந்து உணர்ந்திருக்கிறேன். எனக்கு மகன் ஒருவனும் மகள் ஒருத்தியும் இருக்கிறார்கள். இருவருமே படிப்பில் சுட்டிகள்; தொண்ணூற்று ஐந்து விழுக்காட்டிற்குக் குறைவாக மதிப்பெண் பெற்றதே இல்லை. ஒரே சாதியில் மணம் முடித்திருந்தால் கூட இப்படிப்பட்ட குழந்தைகள் இருந்திருப்பார்கள் என்று சொல்ல முடியாது.

திருப்பூரில் குணசேகரன் என்பவரைத் தலைவராகக் கொண்டு சாதிமதம் மாறித் திருமணம் செய்வோர் நலச்சங்கம் இருக்கிறது. சாதிமதம் மாறித் திருமணம் செய்வோர்க்கு அவர் வேலையும் வாங்கிக் கொடுக்கிறார்; அத்துடன் நிற்பதில்லை. மகப்பேற்றுச் செலவையும் ஏற்றுக் கொள்கிறார்.

2001இல் கரூர் மணி முத்தீசுவரர் கோவி–ல் தமிழில் குடமுழுக்கு நடத்திட நாங்கள் முயன்றோம். அப்போது வழிபாட்டுக் குழுத் தலைவராக இருந்த காஞ்சி சங்கராச்சாரியார் அதைத் தடுத்து நிறுத்திட எவ்வளவோ முயன்றார்; தமிழில் குடமுழுக்கு நடத்தக் கூடாது என்று கடிதம் எழுதினார். ஆனால், அதையெல்லாம் தாண்டி மக்களைத் திரட்டிப் போராடி நாங்கள் வெற்றி பெற்றோம். அக்குடமுழுக்கு விழாவிற்குப் பேராசிரியர் தெய்வநாயகத்தை அழைத்துச் சிறப்பாக அவ்விழாவை நடத்தினோம்.

அதன் பிறகு தான் கரூரில் தமிழ் வழிபாட்டு மாநில மாநாட்டை நடத்தினோம். இப்போது நடக்கும் இம்மாநாடு மிகப்பெரிய எழுச்சியைத் தமிழகத்தில் ஏற்படுத்தும் என்பது உறுதியாகத் தெரிகிறது.

**பேராசிரியர் முனைவர் பா. வளன் அரசு**

தமிழ் இன மீட்பராகப் பேராசிரியர்



முனைவர் பா. வளன்அரசு

தெய்வநாயகம் செயலாற்றி வருகிறார். நான் அதிகம் பேச விரும்பவில்லை. "அழகிய முகத்தைப் பற்றி முப்பது பக்கங்கள் எழுதுவதை விட தியாகி சிந்திய இரத்தத்துளியை மூன்று வரி எழுதினால் அதிகம்" என்னும் எழுத்தாளர் இரா.சு. நல்லபெருமாளின் வரிகளை நினைவில் கொண்டு இங்கு நின்று கொண்டிருக்கிறேன். பேராசிரியர் தெய்வநாயகம் தொடர்ச்சியாகத் தமிழர் சமயம் இதழில் தமிழின விழிப்புணர்வுக்காக எழுதி வருகிறார்கள்; அவருடைய எழுத்துகள் நம்மை இயக்கி வருகின்றன. இலண்டன் மாநகரில் வில்–யம் ஜோன்சு தன் கையில் மனு தர்மத்தைக் கையில் வைத்துக் கொண்டிருப்பது போல சிலையைக் கோவி–ல் வைத்திருக்கிறார்கள் என்பதை அவருடைய வரிகளில் இருந்து தான் தெரிந்து கொண்டேன். மனுசுமிருதி புத்தகத்தைக் கையில் வைத்துக் கொண்டு சிலை வைக்க நாம் விட்டிருக்கிறோம் என்றால் என்ன பொருள்? தமிழினம் இன்னும் தூங்கிக் கொண்டிருக்கின்றது என்பது தானே பொருள்?

வேத காலம் என்பது பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முந்தைய ஆண்டு என்று இதுவரை நம்மை ஏமாற்றி வந்திருக்கிறார்கள். "சமஸ்கிருதம் என்னும் மொழி கி.மு. வில் இருந்ததற்கு சான்றே கிடையாது; முதல் கல்வெட்டே கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் தான் கிடைக்கிறது என்னும் அழுத்தமான கருத்துகளின் மூலம் அந்த ஏமாற்று வார்த்தைகளைத் தவிடு பொடி யாக்கியிருக்கிறார் பேராசிரியர் தெய்வநாயகம்.

இங்கே சிவஞானபோதத்தைப் பற்றிப் பேசினார்கள். பாளையங்கோட்டை மாநிலத் தமிழ்ச் சங்கத்தில் சிவஞானபோதத்தைப் படித்து ஒப்புவிப்பவர்களுக்கு நாங்கள் பரிசு கொடுத்துப் பாராட்டி வருகிறோம். சிவஞான போதத்தை முழுமையாகப் படிக்காவிட்டால் கூட, 'அவன் அவள் அது' என்பதை உணர்ந்தால் போதும். அதன் பிறகு சாதிச்சண்டைக்கோ மதச் சண்டைக்கோ இடமில்லை.

**"ஒரு காலத் தமிழ்நாடு இது தானடா உன் காலத் தமிழ்நாடு அறியாதடா"**

என்று சொல்வதைப் போல, பழந்தமிழர் வாழ்வியல் எப்படிச் செம்மையான நிலையில் இருந்தது என்பதைப் பேராசிரியர் தெய்வநாயகம் நினைவுபடுத்தி நம்மை வழிநடத்தி வருகிறார். "தமிழ்நாட்டைத் தமிழரே ஆள வேண்டும்" என்று பேராசிரியர் கூறுகின்ற செய்தி நற்செய்தி; புரட்சிச் செய்தி; இந்திய விடுதலைப் போராட்டத்தை விடப் பெரிய போராட்டத்திற்கு, **"தமிழ்நாட்டைத் தமிழரே ஆள வேண்டும்"** என்னும் போராட்டத்திற்கு நாம் ஆயத்தமாக வேண்டும். தமிழின விடுதலை என்பது அண்மையில் இருக்கிறது.

**பொதுச்செயலாளர் – இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கழகம் கலைமாமணி பேராசிரியர் ஹாஜி மு. சாயபு மரைக்காயர்**

சைவத்தைப் போற்றி வளர்த்த காரைக்கால் அம்மையார் பிறந்த ஊரில் இருந்து நான் வந்திருக்கிறேன். "இருட்டறையில் உள்ளதடா உலகம் – சாதி இருக்கின்ற தென்பானும் இருக்கின்றானே!" என்னும் பாவேந்தரின் வரிகளை நினைத்துப் பார்க்கிறேன். உலகின் முதல் மனிதனான ஆதம் ஒரு தமிழன் தான்!

உலகில் உள்ள செம்மொழிகளை ஒப்பிடத் தமிழன் பெருமை அளப்பரியது.

சீனர்கள் தங்களைச் சீனர்கள் என்று அழைத்தார்கள். பிற இனத்தாரைப் பிசாசு



கலைமாமணி சாயபு மரைக்காயர்

என்றார்கள். கிரேக்கர்கள் தங்களைக் கிரேக்கர்கள் என்று சொன்னார்கள். பிற இனத்தாரைப் பேய் என்று பொருள்படும் ‘ஏ–யன்ஸ்’ என்று கூப்பிட்டார்கள். அரேபியர்கள் தங்களை அரேபியர்கள் என்று சொன்னார்கள்; பிற இனத்தாரை அஜமிகள் என்று பழித்துச் சொன்னார்கள். அஜமிகள் என்றால் பேசத் தெரியாதவர்கள் என்று பொருள் ஆகும். ஆரியர்கள் தங்களை ஆரியர்கள் என்று அழைத்தார்கள். பிற இனத்தாரை மிலேச்சர்கள் என்று இழிவுபடுத்திச் சொன்னார்கள்.

தமிழினம் ஒன்று தான் “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்று உலகப் பொதுமை பாராட்டியது.

இசுலாத்தை அந்நிய மார்க்கமாகப் பார்க்கும் பார்வை இருக்கிறது. ஆனால் அது உண்மையன்று! இசுலாம் இங்குத் தமிழனாகப் பிறந்த ஆதமிடத்தில் தொடங்கி வெளியே சென்று இங்கு வந்திருக்கிறது! அவ்வளவு தான்! இதை மிக எளிதாக நிறுவலாம். தமிழ், “ஒன்றே குலம் ஒருவனே தேவன்” என்று சொல்கிறது. இசுலாம் இதைத் தான் ‘ஏகத்துவம்’ என்கிறது. ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” என்று சொல்கிறார் திருவள்ளுவர். இதை இசுலாம் ‘சமத்துவம்’ என்று பாராட்டுகிறது. “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்று தமிழில் நாம் சொல்வதைத் தான் இசுலாம் சகோதரத்துவம் என்று சொல்கிறது. ஆகத் தமிழர் சமயம் இங்கிருந்து அரபிக்குச் சென்று திரும்பி இசுலாம் மார்க்கமாகி இருக்கிறது என்பது புரிகிறது அல்லவா?

நபிகள் நாயகம் சமூகப் புரட்சியாளராகத் திகழ்ந்தவர்; அவர் வாழ்ந்த சமூகத்தில் இருந்த மூடப்பழக்க வழக்கங்களை ஒழித்து, ஓரிறைக்கொள்கை, பெண்சிசுக்கொலைத் தடுப்பு ஆகியவற்றை அவர் செயல்படுத்தினார். பேராசிரியர் தெய்வநாயகமும் அவர் வழியில் இங்குள்ள மூடப்பழக்க வழக்கங்களை ஒழிக்க அயராது உழைத்து வருகிறார்.

எந்த ஒரு செயலும் திட்டமிட்டுச் செய்தால் வெற்றியடைவது உறுதியாகும். அதிலும் சாதி ஏற்றத்தாழ்வு ஒழிப்பு என்பது பொது நலம் சார்ந்தது. எனவே இதில் வெற்றி என்பது குறித்து ஐயமே வேண்டாம். சாதி ஏற்றத்தாழ்வு ஒழிப்பை அடுத்து, “தமிழ்நாட்டைத் தமிழரே ஆள வேண்டும்” என்னும் கொள்கையைப் பேராசிரியர் கையில் எடுத்திருக்கிறார். அதுவும் தேவையான ஒன்று தான்!

நான் “உலக சமயங்களை ஒன்றிணைக்கும் தமிழர் சமயமும் தமிழர் ஆன்மவியலும்” நூலைப் படித்தேன்; மிகச் சிறந்த படைப்பு. அதில் ஒரு சிறு விளக்கத்தைக் கொடுக்க விரும்புகிறேன். பேராசிரியர் அந்நூ–ன் எழுபதாவது பக்கத்தில் “இசுலாம் அரேபியரின் சமயமா? உலகத்தினருக்கான சமயமா?” என்னும் கோணத்தில் ஒரு கேள்வியை எழுப்பியிருக்கிறார். இசுலாம் உறுதியாக உலகத்தினருக்கான மார்க்கம் தான்! ‘இரக்பில் ஆலமின்’ என்று தான் நாங்கள் சொல்கிறோம். அகிலத்திற்கு அருட்கொடை என்றுதான் நபிகள் குறிப்பிடுகிறார்.

இசுலாத்தில் ஓர் அரபி, அரபி அல்லாதவரை விட உயர்ந்தவர் அல்லர். ஓர் ஆண் பெண்ணை விட உயர்ந்தவர் அல்லர். ஹஜ் யாத்திரை என்பது உலக சகோதரத்துவ மாநாடு தான்! நீங்கள் கவனித்துப் பார்த்தால் தெரியும்! ஹஜ் யாத்திரையில் நாங்கள் பின்பற்றுவது “ஒரே உடை, ஒரே மறை; ஒரே முறை” என்பதைத் தான்!

புலால் உணவைக் கூட மூன்று பங்கு ஏழைக்கு, ஒரு பங்கு சுற்றத்தார்க்கு என்று இசுலாம் வரையறுக்கிறது. எல்லோரையும் மனிதர்களாகப் பார்க்கத்தான் இசுலாம் கற்றுக்கொடுக்கிறது. நபிகளுக்குப் பாங்கு சொன்னவர் தடித்த உதடுகளுடன் கூடிய கறுப்பராகிய பிலால் என்பவர் தாம்! எனவே ,ஐயமே வேண்டாம்! இசுலாம் அகிலத்திற்கு


Fr. P அமல்ராஜ்

ஆண்டவன் கொடுத்த கொடை தான்!


பாஸ்டர் லூர்துசாமி

அண்டை அயலார்க்கு உதவ வேண்டும் என்று வ–யுறுத்தும் மார்க்கம், அண்டை அயலார் வீடு என்பது ‘உன் வீட்டைச் சுற்றி ஒவ்வொரு திசைகளிலும் இருக்கும் நாற்பது வீடுகள்” (மொத்தம் நூற்று அறுபது வீடுகள்’ என்று வரையறையையும் சொல்கிறது. “அண்டையில் உள்ள நூற்று அறுபது வீடுகளில் யாரேனும் பசித்திருக்க நீ விருந்துண்ணக் கூடாது”, என்கிறார் நபிகள் நாயகம்.

இன்னொரு கருத்தையும் நான் பதிய விரும்புகிறேன். இந்நூ–ல் கத்தோ–க்கத் திருச்சபையும் அமெரிக்காவும் உலக சமயங்களை ஒன்றிணைக்க உதவ வேண்டும் என்பது போல ஒரு கருத்து கூறப்பட்டுள்ளது. அதையும் மறு பரிசிலனை செய்ய வேண்டும். இதில் பேராசிரியர் தெய்வநாயகத்தின் மதச் சார்பு நிலை தம்மை அறியாது வெளிப்பட்டிருக்கலாம்.

மனித சமூகம் மனித உடல் போல இருக்க வேண்டும்! அதாவது உட–ல் ஓர் உறுப்பு துன்பத்தை உணர்கிறது என்றால் அத்துன்பத்தை மற்ற உறுப்பும் உணரும்! அது போல!

## பேராசிரியர் தெய்வநாயகம் அளித்த விடை:

இசுலாத்தில் ஹஜ் யாத்திரையைப் பற்றி ஐயா குறிப்பிட்டார்கள். ‘இசுமாயிலும் இபுராகிம் நபியும் இணைந்து நட்டிய கல் மெக்கா கல்’, ‘நபிகள் நாயகம் முத்தமிட்ட கல்’ என்னும் நிலையில் இசுலாம் அக்கல்லை மதிக்கிறது. ‘ப– நிறைவேற்றக் கோட்பாட்டை’ ஏற்றுக் கொண்ட சமயமாகக் காட்சியளிக்கும் இசுலாத்தில் ஹஜ் யாத்திரைக்குச் செல்வோர், ‘ப– கொடுப்பதற்குப் பணம் கொடுக்காமல் மெக்கா செல்வதற்கு விசா (புகவுச்சீட்டு) பெற முடியாது’ என்னும் நிலைதான் இன்றளவும் இருக்கிறது. எனவே தான், ‘அது அரேபியருக்கான சமயமா? உலகத்தினருக்கான சமயமா?’ என்னும் கேள்வி எழும்புகிறது.

பொதுவாக, இசுலாத்தில் சாதி ஏற்றத்தாழ்வு என்பது இல்லை; இந்நிலையில் அது பிற சமயங்களுக்கு வழிகாட்டியாக இருக்கிறது. நான் எம்மதத்தையும் சாராமல் தான் இக்கேள்வியை முன் வைத்திருக்கிறேன். இசுலாம் போன்ற சமயங்களைப் பற்றி நான் எழுதிவிட்டு, அப்படியே அச்சிட்டு விடுவதில்லை. இசுலாத்தைச் சேர்ந்த அறிஞர்களை அணுகி ‘ஐயா நான் இப்படி எழுதியிருக்கிறேன். இது சரிதானா? இதை எப்படிப் பார்க்கிறீர்கள்? மாற்றம் எதுவும் தேவையா?” என்று கேட்டு அவர் களுடைய ஒப்புதலுக்குப் பிறகு தான் அச்சிட்டு வருகிறேன்.

நான் இந்துவாக இருந்து கிறித்தவத்திற்குச் சென்று பின் கிறித்தவ மதத்தின் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து விலகியே ஏறத்தாழ நாற்பத்தைந்து ஆண்டுகள் ஆகி விட்டன. இன்றைய சூழ–ல் இரு தலைமைகள் இருக்கின்றன. ஒன்று அரசியல் தலைமை! அதாவது, இந்த அரசியல் தலைவர் சொன்னால் உலகில் உள்ள பிற நாட்டு அரசியல் தலைவர்கள் கேட்பார்கள் என்னும் நிலையில் உள்ள தலைமை! அத்தலைமை நிலையில் அமெரிக்கா தான் இன்று இருக்கிறது. எனவே தான் அமெரிக்காவைக் குறிப்பிட்டிருக்கிறேன்.

அடுத்து, இரண்டாவது ஆன்மீகத் தலைமை! உலகில் பிற மதத் தலைவர்களை அழைத்து சமய நல்–ணக்கக் கூட்டங்கள், மாநாடுகள் நடத்துவது இன்றளவில் கத்தோ–க்கத் திருச்சபை மட்டும் தான்! 1965ஆம் ஆண்டிற்குப் பிறகு இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூடி, ‘உலகச் சமயங்கள் அனைத்திலும் இறை ஒளி உள்ளது; எனவே பிற மதத்தாரையும் அழைத்து உரையாட வேண்டும்’ என்று ‘தீர்மானம்



அ.ப. தனபாலன்

நிறைவேற்றிப் பிற சமயங்களை ஒன்றிணைக்கும் வேலையை அவர்கள் மட்டும் தான் செய்து வருகிறார்கள். எனவேதான் கத்தோ–க்கத் திருச்சபையை நூ–ல் குறிப்பிட்டிருக்கிறேன். கலைமாமணி சாயபு மரைக்காயருடைய இக்கேள்விகள் பலருடைய உள்ளங்களில் இருந்திருக்கலாம். ஆனால் அவர் இங்கு எழுப்பிய வினாக்கள்தாம் அவையனைத்திற்கும் விடை சொல்ல வழிவகை செய்து தந்திருக்கின்றன. எனவே, ஐயாவுக்கு மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றியைக் கூறும் அதே வேளையில் 'இசுலாமியப் பெரியவர்களைப் பிற சமயத்தலைவர்களுடன் உரையாடும் வாய்ப்பையும் ஐயா உருவாக்கித் தரவேண்டும்' என்று அன்புடன் அவர்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

முன்னதாக மாநாட்டிற்கு வந்தோரைத் தமிழர் சமயம் துணையாசிரியர் சீர்காழி சிவ. சந்திரசேகரன் வரவேற்றுப் பேசினார். 'சாதிகள் இல்லையடி' என்னும் பாடலை பாசுடர் நேசன் பாடினார். மாநாட்டுத் தீர்மானங்களை அருள்தந்தை அமல்ராசு அடிகளார் முன்மொழிந்தார். அர்ச்சகர் சு. சீனிவாசன் வழிமொழிந்தார்.

"கனியிடை ஏறிய களையும் – முற்றல்
கழையிடை ஏறிய சாறும்,
பனிமலர் ஏறிய தேனும் – காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்,
நனிபசு பொழியும் பாலும் – தென்னை
நல்கிய குளிரிள நீரும்,
இனியன என்பேன் எனினும் – தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்!"

என்றார் பாவேந்தர் பாரதிதாசன். மனிதர்களுக்கே இரண்டு மொழிகள் தெரிந்திருக்கின்றன. ஆனால், ஆரிய பிராமணர்கள் இறைவனுக்கே சமஸ்கிருதம் என்னும் ஒரு மொழி தான் தெரியும் என்று சொல்கிறார்கள். இது இறைவனைக் கொச்சைப்படுத்துவது ஆகாதா? மாணிக்கவாசகரும் நாயன்மாரும் பேசிய மொழி இறைவனுக்குப் புரியாத மொழியா? 'வன்செவியோ நின்செவிதான்' என்று கேட்ட மொழி இறைவனுக்கு ஆகாத மொழியா?

கடந்த சில மாதங்களுக்கு முன் செய்தித்தாளில் செய்தி ஒன்றைப் பார்த்தேன். ஒரு குரங்கு, நாய்க்குட்டி ஒன்றற்குப் பாலூட்டுகிறது என்னும் செய்திதான் அது! ஐந்தறிவு படைத்த குரங்கே இன்னோர் இனத்தைப் பகையினமாக எண்ணவில்லை; பரிவுடன் பாலூட்டுகிறது. ஆனால், ஆறறிவு படைத்த ஆரிய பிராமணர்களோ நம்மை வேற்றினமாகக் கருதி இழிவுபடுத்தி வருகிறார்கள். இந்நிலை மாற வேண்டும்.

தமிழர் சமயக் கோவில்களுக்கும் ஆகமங்களுக்கும் தொடர்பே இல்லாத ஆரிய பிராமணர்களின் பிடியில் இன்று நம்முடைய கோவில்கள் சிக்கிக் கொண்டிருக்கின்றன.

'அனைத்துச் சாதியினரும் அர்ச்சக ராகலாம்' என்னும் திட்டத்தின் கீழ் நாங்கள் ஏறத்தாழ இருநூறு பேர் அர்ச்சகர் பயிற்சி பெற்றோம். அத்திட்டத்திற்கு ஆரிய பிராமணர்களும் அவர்களுடைய அடிவருடிகளும் நீதிமன்றம் சென்று தடை பெற்றனர். ஆனால், அப்போது நாங்கள் கவலைப்படவே இல்லை.





அர்ச்சகர் சு. சீனிவாசன்

ஏனென்றால், இந்துக்களுக்கு என்று இங்கு கட்சிகள் இருக்கின்றன. இயக்கங்கள் இருக்கின்றன. பா.ஜ.க. என்னும் கட்சி நமக்காகப் போராடும்; இந்து முன்னணி, ஆர்.எஸ்.எஸ்., வி.எச்.பி. காஞ்சி சங்கர மடம் ஆகியன இருக்கின்றன. அவர்கள் நமக்காகப் போராடுவார்கள் என்னும் நம்பிக்கை எங்களிடம் இருந்தது. எனவே நாங்கள் மகிழ்ச்சியாகத் தான் இருந்தோம்.

ஆனால், நடந்ததோ வேறு! அவர்களுள் ஒருவர் கூட எங்களுக்காக வாதாடவில்லை; பரிந்து பேசவில்லை. அப்போதுதான் புரிந்தது அவர்கள் அனைவரும் நடிகர்கள்; இந்துக்களுக்காக உழைப்பது போல வேடமிடும் கபடதாரிகள் என்று! அப்போது எங்களுக்காகத் தமிழ்நாட்டில் இருந்து ஒரே ஒரு குரல் தான் ஓங்கி ஒ–த்தது – அது பேராசிரியர் தெய்வநாயகத்தின் குரல்தான்! நான் பெரியார் திராவிடர் கழகக் கூட்டத்தில் பேசிய பேச்சைக் கேட்டு, பேராசிரியர் என் வீடு தேடி வந்தார். அதன் பின் எங்களுக்குள் கடிதப் போக்குவரத்து இருந்தது.

இறுதியாகத் தான் தமிழின மீட்புப் பணியில் தம்மை முழுமையாக ஒப்படைத்திருக்கும் பேராசிரியருடன் கை கோக்க முடிவு செய்தேன். அதன் பிறகு தான் புனிதமான இந்து மதம் சாதி ஏற்றத்தாழ்வு என்னும் இந்துத்துவாவின் பிடியில் சிக்கி அழிந்து வருவதை உணர்ந்தேன்.

கடந்த ஓராண்டுக் காலம் பேராசிரியருடன் தங்கி நான் பயிற்சி பெற்றேன்.

இப்போதைய நம்முடைய தேவை அடிமையினமாக இருக்கும் தமிழினம் அடிமைத்தளையில் இருந்து விடுபட வேண்டும். அதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டும். எனவே, அதன் தொடக்கமாக முழுமையாகச் சாதி ஏற்றத்தாழ்வு மனப்பான்மை ஒழிப்பு பணியில் என்னை ஈடுபடுத்திக்கொள்ள விரும்புகிறேன். அருள்தந்தை அமல்ராசு அடிகளார் முன் மொழிந்த பதின்மூன்று தீர்மானங்களையும் நான் வழிமொழிகிறேன்.

ஆசிரியர் ஆ.ப. தனபாலன் வள்ளலார் பாடல் ஒன்றைப் பாடினார். நிறைவாக போதகர் லூர்துசாமி நன்றி கூறினார். தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கிய மாநாடு நாட்டுப்பண்ணுடன் நிறைவடைந்தது.

# சாதி ஏற்றத்தாழ்வு மனப்பான்மை ஒழிப்பு மாநாடு சூழ்ச்சிகள் மத்தியிலும் வெற்றி பெற்றதன் பின்னணி என்ன?

சாதி ஏற்றத்தாழ்வு மனப்பான்மை ஒழிப்பு மாநாடு
நடைபெறப் போகிறது என்று கேள்விப்பட்டவுடன்
மகிழ்ச்சி அடைந்தோரும் உண்டு;
கொதித்துப் போனோரும் உண்டு.

தமிழினத்தை அடிமைப்படுத்தி,
இழிவுபடுத்தி,
நசுக்குவதில்
சுகம் கண்டோர்
எப்படியாவது இந்த மாநாட்டை
நடத்த விடக் கூடாது என்று
கங்கணம் கட்டிக் கொண்டு,
இரவு, பகல் தூங்காது,
சதித் திட்டம் தீட்டி
மின்னல் வேகத்தில் செயல்பட்டனர்.

மாநாட்டிற்கு வர இருந்த தலைவர்கள் சிலருக்கு
உள்ளம் வர விரும்பினாலும்
உடல் ஒத்துழைக்காத பரிதாப சூழல்.

எது எப்படி இருந்தாலும்
எடுத்த காரியத்தை முடித்துத் தீர வேண்டுமென்ற
உள்ள உறுதியுடன்
அனைத்துத் தன்மானத் தமிழர்களின் ஒருங்கிணைப்பாளரான
நமது ஆசிரியர்
மாநாட்டை நடத்தினார்.

மாநாட்டில் வர இருந்த
தலைவர்கள் சிலர்
வர இயலாத சூழல்
எதிர்பாராமல்,
தமிழின விடுதலை உணர்வுடைய
சான்றோர் பெருமக்கள் பலரும்
மாநாட்டிற்கு வர,
'கரும்பு தின்ன கூலி கிடைத்த' கதையாயிற்று.

மாநாட்டின் மையப் பொருளை
உள்ளத்தே கொண்டு,
அவர்களுக்கேயுரிய
சிறந்த நுண்மாண் நுழை புலத்தோடு
சாதி ஏற்றத்தாழ்வு மனப்பான்மை ஒழிய வேண்டுமே என்ற
மனப் பாரத்தோடு
அவர்கள் ஆற்றிய பேருரைகள்
மாநாட்டிற்கே தனிச் சிறப்பை அளித்தன.

நாமொன்று நினைக்க
தெய்வமொன்று நினைப்பார்
என்பதற்கேற்ப,
மாநாடு நடை பெற விடாது
தடுத்து நிறுத்த வேண்டும்
அல்லது
மாநாட்டில் என்னென்ன இடையூறுகள்
செய்ய வேண்டுமோ,
அத்தனையும் செவ்வனே செய்ய வேண்டும் என்று
திட்டங்கள் தீட்டி, செயல்பட்டோர்
நாணுமாறு
மாநாடு செம்மையுற நடைபெற்றது.

இவ்வாறு,
வெற்றி பெறக் காரணமென்ன என்று
மாநாட்டை நடத்தியோரின்
பின்னணியைப் பார்த்தால்
மறைந்து கிடக்கும்
உண்மை புரியும்.

மாநாட்டை நடத்தியோர்
அரசியல் பலம் உடையவரும் அல்லர்;
பண பலம் உடையவரும் அல்லர்;
சமுதாயத்தில் பெரும் செல்வாக்கு உடையவரும் அல்லர்;

அப்படியிருக்க,
மாநாடு சிறப்பாக நடைபெறக்
காரணம்,

*"தமிழினத்தை விடுவிக்கப் போகின்றேன்.
இதைக் கூறி அறிவிக்கும் கருவியாக உன்னைப்
பயன்படுத்துகின்றேன்"*
என்று நமது ஆசிரியருக்குக்
கடவுள் இட்ட கட்டளையோடு,

"குடி செய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான் முந்துறும்"

என்ற வள்ளுவரின் வாக்கிற்கேற்ப,
இறைவனே வரிந்து கட்டிக் கொண்டு,
முந்தி வந்து
சூழ்ச்சிகளை உடைத்து,
சிக்கல்களை அறுத்து,
மாநாடு
சீரும் சிறப்புமாக நடைபெற
செயல்பட்ட காரணமே ஆகும்.

இதை மாநாட்டிற்கு வந்திருந்தோர் நன்கு அறிவர்.
மாநாடு எவ்விதக் கலவரமுமின்றி
அமைதியாக,
ஆரவாரமின்றி,
எதிர்பார்த்ததை விட சிறப்பாக
நடைபெற்றதைக்
கேட்டறிந்த பலரும்
ஆசிரியருக்கு வாழ்த்து
தெரிவித்ததுடன்
மாநாட்டின் மையப் பொருளான
சாதி ஏற்றத்தாழ்வு மனப்பான்மை ஒழிப்பிற்குத்
தாங்களும் துணை செய்வதாகக் கூறியிருப்பது
தமிழின விடுதலையை யாரும் தடுத்து நிறுத்த முடியாது
என்பதைச்
செவ்வனே காட்டுவதாயுள்ளது.

இறைவனால் ஆட்டுவிக்கப்பட்டோர் மாநாட்டை நடத்தியதால்
"ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே"
என்பது உள்ளங்கை நெல்லிக் கனியாயிற்று.

– தெ. தேவகலா

# சாதி ஏற்றத்தாழ்வு ஒழிப்பு மாநாடு

## பெரியார் திடல், சென்னை.

## டாக்டர் ஆ. பத்மநாபன் I.A.S. Retd., அவர்களின்

(முன்னாள் தலைமைச் செயலர் – தமிழ்நாடு அரசு, மற்றும் முன்னாள் ஆளுநர் – மிசோரம் மாநிலம்)

## தலைமை உரை - நாள் 19.05.2012

பேராசிரியர் முனைவர் தெய்வநாயகம் அவர்களே, முனைவர் தேவகலா அவர்களே, இவர்களுக்கு உறுதுணையாயிருந்து பணி செய்யும் அன்பர்களே, அறிஞர் பெருமக்களே, தாய்மார்களே, நண்பர்களே!

சாதி ஏற்றத்தாழ்வு ஒழிப்பு மாநாட்டிலே பங்கேற்பதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. இம்மாநாடு பெரியார் திட–ல் நடைபெறுகிறது. இதே இடத்தில் தந்தை பெரியார் முன்னிலையில் நான் பங்கு பெற்ற நிகழ்ச்சிகளை, கூட்டங்களை நினைத்துப் பார்க்கிறேன். பெருமை கொள்கிறேன். தன் வாழ்நாள் பூராவும் இந்தச் சமுதாயம் சாதிபேதமற்ற, மூடபழக்கங்கள் அற்ற, சுரண்டலற்ற, நல்ல சமுதாயமாக்கப் பாடுபட்டவர் புரட்சியாளர் பெரியார் அவர்கள். இவருக்கு உறுதுணையாக சமுதாயப் புரட்சி செய்தவர் பாபசாகேப் அம்பேத்கர் அவர்கள். பெரியார் இயக்கத்தை நண்பர் திரு. வீரமணி அவர்களும், மற்றவர்களும் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள். இந்த இடத்திலே இந்த மாநாடு நடப்பது மிகவும் பொருத்தம்.

சாதி ஒழிய நீங்கள் பாடுபடுகின்ற இந்த நேரத்தில் இந்தியா முழுவதும் சாதிவாரிக் கணக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பேராசிரியர் முனைவர் மு. தெய்வநாயகத்தையும், முனைவர் தெ. தேவகலாவையும் பல ஆண்டுகளாக எனக்குத் தெரியும். முனைவர் தெய்வநாயகம் அவர்கள் சிறந்த சிந்தனையாளர், அறிஞர், இறையுள்ளம் கொண்ட பண்பாளர், தைரியமிக்க எழுத்தாளர், சீர்த்திருத்தவாதி. இந்தச் சமுதாயத்தைச் சீர்த்திருத்த பல ஆண்டுகளாக முயன்று வருகிறார். அரசியல்வாதியாக ஆவது சுலபம். சீர்த்திருத்தவாதியாக ஆவது மிகவும் கடினம். சிக்கலானது. இருப்பினும், முனைவர் தெய்வநாயகம் அவர்கள், சீர்த்திருத்தவாதியாகவும், இலட்சியவாதியாகவும் இன்றும் பணி செய்துவருகிறார். இவருடன் முனைவர் தேவகலா அவர்களும், தெளிந்த சிந்தனையுடனும், அறிவாற்றலுடனும், ஆராய்ச்சிப் பணியில் உடனிருந்து உழைத்து வருகிறார். இவர்களுக்கும், இவருடன் இணைந்து பணியாற்றும் பல அன்பர்களுக்கும் என் பாராட்டுதல்கள்.

நம்நாட்டிலே சாதிநோய், நீண்ட நெடுங்கால நோய். அது ஒரு Chronic Disease. இந்த நோயை அகற்றப்பாடுபட்டவர் ஏராளம். யாரும் வெற்றி பெறவில்லை. இன்னும் இதை விரட்ட, ஒழிக்க பல நல்ல உள்ளங்கள் தொண்டு செய்து வருகின்றன. இது எப்பொழுது வந்தது? எப்படி வந்தது? ஏன் வந்தது? என்ற கேள்விகளுக்கு ஆராய்ச்சியாளர்களும், அறிஞர்களும், சீர்த்திருத்த உள்ளங்களும் சிரமப்பட்டு விளக்கம் கூறியிருக்கிறார்கள்.

தமிழ் மக்கள் வரலாற்றிலே, அகத்தியம், தொல்காப்பியம், சங்ககால இலக்கியங்களிலே, இந்தச் சாதிப் பிரிவினையைப் பற்றி எந்தவிதமான குறிப்புகளும் இல்லை. பண்பும், நல்ல நெறியும், ஒழுக்கமும் ஆன்மீகமும், அன்பும், மக்கள் பின்பற்றினர். இந்த நிலை மாறியதற்குக் காரணம் அந்நிய கலாச்சாரம் நுழைந்ததுதான்.

ஆரியக் கலாசாரம், கோட்பாடுகள் அடங்கிய வேதங்களில் முக்கியமானதும், முதன்மையானதும் ரிக்வேதம் (2000–1500 BC) ஆகும். இதில் புருஷ சுக்தா என்ற தலைப்பில் சதுர்வர்ணத்தைப் பற்றி முதல் முதலாகக் கூறியுள்ளது. பிராமணர், க்ஷத்ரியர், வைசியர், சூத்திரர் என்ற நிலையை ஏற்படுத்தியது. கௌடில்யாவின் 'அர்த்தசாஸ்திரம்' (321 to 296 BC) சாதிகளை விவரமாக குறிப்பிட்டுள்ளது. மனுஸ்மிருதியும், வர்ணம், சாதி என்ற முறைகளை ஆண்டவன் பெயரில் வகுத்துள்ளது.

பகவத்கீதையில் "நாலு வர்ணங்கள் என்னால் ஆக்கப்பட்டவை. அதனை மாற்றி அமைக்க என்னால் முடியாது" என்று கிருஷ்ண பகவான் கூறியிருப்பதாக எழுதப்பட்டிருக்கிறது. இந்தப் பாகுபாட்டைப் பின்பு எழுதப்பட்ட இதிகாசங்களும் மற்றும் வேத நூல்களும் பிறப்பின் அடிப்படையில் சாதிப் பிரிவுகளாகப் பிரித்து, ஒற்றுமையில்லாமல், சகோதரத்துவமில்லாமல் ஒருவருக்கொருவர் சேராதவண்ணம், நிரந்தரப் பிரிவினைகளை சமுதாயத்தில் கொண்டு வந்தன. ஆரியர்கள் சுமார் 3000 கி.மு.வி–ருந்து வடமேற்கு இந்தியாவுக்குள் வர ஆரம்பித்தனர். ஏற்கெனவே அங்கிருந்த ஆதிக்குடிகளைத் தங்களுடன் சேர்த்துக் கொண்டு, எதிர்த்தவர்களை அடக்கியும், அவர்களுடைய பண்டைய நல்ல நாகரிகத்தைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டும், ஆரிய ஆதிக்கத்தை இந்தியா பூராவிலும் பரப்பினர். சரித்திராசிரியர்கள் இந்தியா பூராவிலும் இந்த ஆரிய மாற்றம் வர 1000 வருடங்களுக்கு மேலாக ஆகியிருக்கும் எனக் கணக்கிடுகிறார்கள். முத–ல் வடமேற்கில் ஆரம்பித்து கிழக்கே சென்று பின்பு மெதுவாக தென்னகத்திற்கும் இந்தப் புதிய மாற்றம் வரத் தொடங்கியிருக்கின்றது. தாங்கள் மற்றவர்களைவிட நிறத்திலும், பிறப்பிலும், அறிவிலும், மேலானவர்கள் என்ற ஸ்தானத்தை வலுப்படுத்துவதற்கும், தங்களை எதிர்த்த ஆதிக் குடிமக்களிடையே பிரிவினையை ஏற்படுத்தி, சிலரை க்ஷத்ரியர்களாகவும், வைஸ்யர்களாகவும் மற்றவர்களைச் சூத்திரர்களாகவும் ஆரியர்கள் வழிமுறைகளை வகுத்து சமுதாயத்தைப் பின்பற்றச் செய்தார்கள். எதற்கும் சம்மதிக்காதவர்களை, அதிலும் ஏற்கெனவே பௌத்த சமயத்தைச் சார்ந்த ஆதிக்குடிகளைத் தீண்டப்படாதவர்கள் என்றும், அவர்கள் தனியாக இருக்க வேண்டும் என்றும் ஒதுக்கி வைத்தார்கள். இவர்கள் 'Out - Castes'

பஞ்மர்கள். சதுர்வணத்தில் சேராத ஐந்தாவது பிரிவினர். தீண்டாமைக் கொடுமை உலகத்தில் எங்குமில்லாதது, நம்நாட்டில்தான் இன்றும் நிலவுகிறது.

இந்தத் தீண்டப்படாதவர்களுக்குத் தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டிலே சரித்திரம், பாரம்பரியம், சிறப்பு ஆகியவை உண்டென்றும் பல சரித்திர ஆசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள் கூறியிருக்கிறார்கள். முக்கியமாக பள்ளர்கள் என்றும், பறையர்கள் என்றும் சொல்லப்படுகின்ற ஆதிதிராவிட நன்குடிமக்கள் நெடுங் காலமாக நல்ல நிலையி–ருந்தார்கள். பின்பு கீழ்நிலைக்குத் தள்ளப்பட்டார்கள் என்று பல சரித்திர நூல்களி–ருந்தும், ஆராய்ச்சிகளி–ருந்தும் தெரிகின்றது.

தீண்டப்படாதோர் எனப்படுவோர் பண்டைய காலத்திலே, ஜாதிபேதமின்றி சமுதாயத்திலே சிறப்பும், வனப்பும் பெற்று குறுநில மன்னர்களாக இருந்திருக் கிறார்கள் என்று ஆராய்ச்சியாளர்கள் பலர் கூறியிருக்கிறார்கள். டாக்டர் கே. ஆர். அனுமந்தன் அவர்கள் அவருடைய நூ–ல் (Untouchability A Historical study upto 1500) கீழ்க்காணுமாறு கூறியிருக்கிறார்.

“An examination of the various theories regarding the origin of some of the major untouchable castes of Tamil Nadu clearly reveals the truth that they were not degraded and despised in the Tamil Society from the very beginning. They were the representatives of the most ancient inhabitants of Tamil Nadu and also its earliest culture, which may be called Dravidian culture. They were independent Social Units. possibly having thier own kings and priests of whom they have a lingering memory. They were engaged in some specialized functions or occupations of thier own and followed social and religious practices, peculiar to themselves. When Brahminism gradually spread over the Tamil Country, they failed to adapt themselves to the new faith and became so many islands in the sea of Brahmanical Hinduism. They became victims of suppression in the political and religious fields and were easily relegated to the lowest status in the society. Owing to their occupations which were ceremonially impure in the estimation of the orthodox Hindus. Thus they became untouchables through the superimposition of the varnasrama system of the Aryans on the crudely stratified social system of Tamils. It is also clear that groups or castes thus degraded never accepted thier de-facto position in the society and went on recalling their long forgotten independence and glory in high sounding legends and customs. But their claims went unnoticed and unrecognized by the high caste Hindus. Being a minority, they were soon overwhelmed by the majority which damned them to eternal servitude as untouchables.

Neville Jayawera in his work ‘Continuity and change in Indian Culture’ says the Dalits are perhaps the most tragic community in human history. Before the Aryanisation of India, i.e. upto 600 B.C. the Dalits appear to have lived a normal communal existence like anyother people in India. The Brahminic interpretation of Varnashrama Dharma and the Manusmirthi changed all that. They were progressively marginalized and denied access even to the barest minimum conditions of a civilized existence”

பல்லவர் ஆண்ட காலத்தில், சைவ, வைணவ சமயங்கள் மேலோங்கியிருந்தன. இச்சமயங்கள் தாழ்த்தப்பட்ட தீண்டப்படாத மக்களைத் தங்களுடன் சேர்த்துக் கொண்ட போதிலும், வேத பிராமண ஆதிக்கம் குறையவில்லை. இந்தக் காலத்தில்தான் மனித உரிமைக்காக முதல்முத–ல் குரல் கொடுத்து சிதம்பரம் கோயிலுக்குச் சென்ற செம்மல் திருநாளைப்போவார் – நந்தனாரும், ஸ்ரீரங்கம் அரங்கனைத் தரிசிக்க விடாமுயற்சியுடன் இருந்த திருப்பாணாழ்வாரும் அவதரித்தார்கள். அடியார்கள் பெற்றான், சாம்பான், தில்லை வெட்டியான், சேந்தனார் ஆகியோரும் மனித உரிமைக்காக பக்தி மார்க்கம் மூலம் குரல் எழுப்பியவர்கள். இருப்பினும் ஜாதிக் கொடுமை குறைந்தபாடில்லை. 8ஆம் நூற்றாண்டு கி.பி.யிலும், சோழர் காலத்திலும், ஜாதிப் பாகுபாடுகளும், கோட்பாடுகளும் நிரந்தரமாக்கப்பட்டன. பிராமண ராஜகுருக்கள், சோழ மன்னர்களை க்ஷத்திரியர்களாக ஏற்றுக் கொண்டனர். இதன் பயனாக அவர்களுக்கு அரச மரியாதையும், நிலம் (பிரம்ம தேயம்) மற்றும் வெகுமதிகளும் கிடைத்தன. அரசர்கள் வேதக் கொள்கைகளையும், நடைமுறை களையும் ஏற்றுக் கொண்டு, மனுதர்ம ஆதிக்கத்தை மக்கள் மேல் திணித்தனர்.

அண்ணல் அம்பேத்கர் அவருடைய நூல்களில் தீண்டப்படாதார், திராவிட அல்லது நாகர் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்றும், அவர்கள் பௌத்த சமயத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், ஆரியக் கலாச்சாரத்தையும், கோட்பாடுகளையும் எதிர்த்ததால் அவர்கள் ஒதுக்கி தள்ளப்பட்டார்கள் என்றும் கூறுகிறார். தீண்டாமை, ஜாதிக் கொடுமை, அநீதிகளை எதிர்த்து நீண்டகாலமாகவே தீண்டப்படாதோர் போராடி வந்துள்ளனர். 1891ல் திராவிட மகாஜன சபா என்ற பெயரில் 1892ல் மாநாடும், மற்ற மாநிலங்களில் போராட்டமும் நடைபெற்றன.

அறிஞர் அயோத்திதாஸ் பண்டிதர், தமிழ்நாட்டிலுள்ள பறையர்கள் முற்காலத்தில் பௌத்த சமயத்தைச் சார்ந்தவர்கள் என்றும் அவர்களுடைய கோவில்களை, சைவ, வைணவர்கள் அபகரித்துக் கொண்டார்கள் என்றும், அவர்கள் சிறந்த கலாச்சாரம் மற்றும் நன்மதிப்புடன் இருந்தவர்கள் என்றும் ‘தமிழன்’ பத்திரிகையிலும், பிற நூல்களிலும் குறிப்பிட்டுள்ளார். தீண்டப்படாதவர்கள் சமுதாயத்தி–ருந்தாலும், அவர்கள் சமுதாயத்தின் மக்களாகக் கருதப்படவில்லை. சோழ காலத்து குறிப்புகள் தீண்டாமையைப் பற்றியும், தீண்டாதோர் வாழ்ந்திருந்த சேரிகளைப் பற்றியும் கூறுகின்றன. பின்பு வந்த பாண்டிய, விஜயநகர் ஆட்சிகளிலும் ஜாதிக் கோட்பாடும், தீண்டாமையும் தலைவிரித்தாடின.

மக்களைப் பிறப்பின் அடிப்படையில் பிரித்து ஒற்றுமையில்லாமல் ஜாதி என்ற கொடுமையைப் புகுத்தி, மனிதநேயம், சமத்துவம், சகோதரத்துவம் பண்புகள் இல்லாமல் இருக்கின்ற இன்றைய சமுதாயத்திற்கு மேற்சொன்ன வேதங்களும், நூல்களும், அவைகள்யாவும் கடவுளின் உபதேசங்கள், மந்திரங்கள் என்று மக்கள் நம்புகின்ற மனப்பான்மையையும், நெடுங்காலமாகக் கையாண்டு வந்த பழக்க வழக்கங்களுமே காரணமாகும். சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன் வருணாசிரமத்தையும், மனுதர்மத்தையும் எதிர்த்து, மனித சமுதாயத்தை ஜாதி, தீண்டாமை போன்ற மற்ற கொடுமைகளி–ருந்து மீட்டு புதிய அறவழியை, மார்க்கத்தை, போதித்தவர் கௌதம புத்தர். இந்த புதிய நல்ல அறத்தை சனாதானர்களும் இந்து மத வெறியர்களும், அடக்கி அழுத்திவிட்டார்கள். பின்பு தோன்றின சீர்த்திருத்த செம்மல்கள் ஜாதியை ஒழிக்க அவர்களால் அந்தந்த காலகட்டத்தில் முடிந்ததைச் செய்தார்கள். பக்தி இயக்கம் ஆண்டவன் முன் யாரும் சமம், என்று சொல்– பாடி, மக்களைத் திருத்த முயன்றனர். பிற்காலத்தில் தோன்றிய இயக்கங்களும், சீர்த்திருத்தவாதிகளும், ஜாதியில்லா சமுதாயம் ஏற்பட முயன்றார்கள். ஆனால் நினைத்த பலன் கிட்டவில்லை. இவைகளைப்பற்றி என்னுடைய நூல்களிலும், சொற்பொழிவுகளிலும் விவரமாகக் கூறியுள்ளேன்.

காந்திஜி வருணாசிரமத்தால் கெடுதி ஒன்றுமில்லை. இந்து மதத்தில் இது இருப்பதால் தப்பில்லை. ஆனால் ஜாதி இந்துக்கள், ஜாதி பித்தர்கள், ஜாதி தீண்டாமை போன்ற தீய பழக்கங்களை விட்டு உண்மையான சுத்தமான இந்துக்களாகயிருக்க வேண்டுமென்று எழுதினார். ஆனால் அவருடைய முயற்சிகள் தோல்வி அடைந்தன.

1936ம் ஆண்டு மே மாதம் ‘லாகூர் ஜாத்–பட்–தொடக்க மண்டல்’ என்ற அமைப்பு சாதி ஏற்றத்தாழ்வை ஒழிக்க கலந்து பேச ஒரு மாநாட்டை கூட்டியது. இதற்கு பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர் அவர்களைத் தலைமை ஏற்று உரையாற்றுமாறு கேட்டுக் கொண்டார்கள். அவரும் ஒத்துக்கொண்டு கருத்துப்பெட்டகமாக, அலசி, ஆராய்ந்து ஒரு நீண்ட உரையை எழுதி அனுப்பினார். ஆனால், மாநாட்டு அமைப்பாளர்கள், இந்த உரையில் புரட்சிகரமான, இந்துமத கோட்பாடுகள், அநியாயங்கள் ஆகியவற்றைச் சாடுகின்ற கருத்துகள் இருப்பதால், இது ஏற்புடையதாக